# 'கீதாரி' புதினத்தில் இடையர்களின் இனவரைவியல் பதிவுகள்

**முனைவர் ச.அருள்செல்வி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி
கோவை

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

குறிப்பிட்ட இனக்குழுவின் பண்பாட்டை விளக்கும் கலை அல்லது அறிவியலை, இனவரைவியல் என்று அழைப்பர். "தனித்துவமான வாழ்வியல் முறைகளை கொண்ட சமூகத்தின் பண்பாட்டை முழுமையாகப் புரிந்து கொண்டு அதனை முறையாகத் தொகுத்து வழங்கும் அறிவியலே இனவரைவியலாகும்"[1]. ஆடுமேய்ப்பவர்களின் வாழ்வியல் களத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அம்மக்களின் குடியிருப்பு அருகே வாழ்ந்து, இனவரைவியல் செய்திகளைச் சேகரித்து 'கீதாரி' என்னும் புதினத்தைப் படைத்தவர் சு.தமிழ்ச்செல்வி. ஆடுகளையே சொத்தாக நினைத்து, வாழும் இடையர்களின் மனப்பாங்கினையும் இனவரைவியல் செய்திகளையும் இப்புதினத்தில் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

மழை, வெயில், பனி என அனைத்தையும் வெட்டவெளியில் எதிர்கொள்ளும் இடையர்களின் வாழ்க்கையானது போராட்டமும், அவலமும் நிறைந்தது. செம்மறி ஆடுகளை போல, இடையர்கள் உலக நடைமுறைகளை அறியாமல் காடுகளில் விளைநிலங்களில் காலத்தைக் கழிப்பவர்கள். அத்தகு இடையர்களின் இனவரைவியல் பதிவுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## குடியிருப்புமுறை

ஆடுமேய்ப்பவர்கள் அரிக்கன் விளக்கின் மூலம் காட்டுக்குள் சூரியனைக் காண்கிறார்கள். ஆடுகளைக் காப்பதற்காக இரவில் விழித்திருந்து நட்சத்திரங்களைப் பார்த்து நேரத்தைக் கணக்கிடுபவர்கள். இடையர்கள் காட்டில் கிடைத்த சூராங்கழி, ரெட்டடவாங்கழி, மூங்கில்கழி இவற்றை வளைத்து கூண்டு கட்டிக்கொள்வார்கள். பனைமட்டையை வெட்டி செறவு பிடித்து கூண்டிற்கு போட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு, மூன்று குடியிருப்புகளை உருவாக்கிக் கொள்கின்றனர். இரவில் ஆடுகளை வட்டங்கட்டி காவல் காப்பர். இப்படி வட்டங்கட்டுவதால் ஆடுகள் திருட்டு போவதைத் தடுத்தனர்.

ஆட்டுக்கிடைக்காக பல ஊர்களுக்கு பயணப்பட்டு, போகுமிடத்தில் கிடைக்கின்ற பனைக் கருக்கு மட்டையால் ஆடுகளுக்கும் பட்டியை உருவாக்குவதோடு, தங்களுக்கான கூண்டுகளையும் நீளவாக்கில் வசதியாய் உருவாக்கிக் கொண்டு வசிப்பார்கள்.

**பொங்கல் விழாவில் ஆடுகளுக்கு நன்றி செலுத்துதல்**

செம்மறியாட்டுக்கிடைகட்டும் ஆட்டுக்காரர்கள் தம் வயிறு காய்ந்தாலும் கூட ஆடுகள் மற்றும் அதன் குட்டிகளின் வயிறு எப்போதும் நிறைந்திருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள். ஒவ்வொரு பொங்கலுக்கும் நல்ல பனைமரமாய் பார்த்து குருத்தோலைகளை வெட்டி, கிடாய்களுக்கு ஓலையில் நெத்திச்சுட்டி செய்து சுருண்ட கொம்புகளுக்கு சாயம் வாங்கிவந்து பூசுவர். நெட்டிச்செடிகளை வெட்டிவந்து வட்டவட்டமாய் சன்னமாய் சீவி கோர்த்து மாலையாக்கி கிடாய்களுக்கும், வெள்ளாட்டிற்கும் கட்டுவார்கள்.

**ஆடுகளுக்கு திருஷ்டி கழித்தல்**

பொங்கலன்று மாலை, ஆடுகளுக்கு திருஷ்டி கழிப்பதற்கென்று சோறுபொங்கிய கோட்டிற்குள் பனை ஓலைகளைப் போட்டு எரியவிட்டு அதில் உப்பையும், மிளகாயையும் போடுவர். உப்பு வெடிக்கும் சத்தத்துடனும், மிளகாய் கருகும் நெடியுடனும் நெருப்பு உயரமாய் எரிந்து கொண்டிருக்கும் போதே ஆடுகளை விரட்டி அந்த கோட்டைத் தாண்ட வைப்பார்கள் இடையர்கள். ஒரே பாய்ச்சலாய் நெருப்பிற்குள் பாய்ந்து ஆடுகள் வந்தால் திருஷ்டி கழிந்துவிடும் என நம்பினர்.

**ஆடுகளுக்குப் பொங்கல் படையலிடுதல்**

இடையர்கள் தளுவை போடுமிடத்திற்கு எதிரே சிறிய தெப்பம் வெட்டி அதில் தண்ணீரும் மஞ்சள் நீரும் ஆட்டுப்பாலும் ஊற்றி தெப்பத்தை நிரப்புவார்கள். தெய்வத்திற்கு முன்பாக கும்பம் சோடித்து வைத்து, கரும்புகளை வளைத்துக்கட்டி அழகுபடுத்துவர். படையலிடும் நேரத்தில் இளம் ஆட்டுக்குட்டியை பிடித்து வந்து தெப்பத்தைச் சுற்றிகட்டிக் கொள்வர். அந்த குட்டிகளை மஞ்சள் நீரால் குளிப்பாட்டி பொட்டிட்டு பூமாலையும் சூட்டி, அதன் ஒருபக்கத்து காதுகளை அறுத்து தெப்பத்திற்குள் போடுவர். அறுத்த காதிலிருந்து வடியும் இரத்ததையும் தெப்பத்திற்குள் விடும்படி செய்வர். பின்பு படைத்த தளுவைச் சோற்றை அக்குட்டிகளுக்கு ஊட்டிவிடுவர். தொழில் ஆதாராமாக விளங்கும் ஆடுகளிடம் பாசத்துடனும், நன்றியுடனும் இதனை இடையர்கள் பாரம்பரிய வழக்கமாக செய்துவருகின்றனர்.

**இடையர்களின் திருமணச் சடங்கு**

திருமணத்தில், மாப்பிள்ளைக்கு பதிலாக, ஆடு மேய்ப்பதற்குப் பயன்படுத்தும் தடிக்கம்பை வைத்து, திருமணச் சடங்கினை நடத்தும் மரபுவழி பண்பாட்டுக் கூறினை 'கீதாரி' புதினம் காட்டுகின்றது. ஆடுமேய்க்கும் தடிக்கம்பு, இடையர்களால் மிக உயர்வாக மதிக்கப்படுவதால், நெருக்கடியான சூழலில், ஆடுகளைப் பராமரிக்க ஆளின்றி தவிக்கும் வேளையில் மாப்பிள்ளை, ஆடுகளை காவல் காக்கும் பொறுப்பை ஏற்று, தனக்குப் பதிலாக தன் தடிக்கம்பை கொடுத்தனுப்பினால், அதுவே மணமகனாக திருமணச்சடங்கில் மதிக்கப்படுகின்றது.

"ஆடுமேய்க்கிற தடிக்கம்ப வாங்கி கொண்டு வந்து தாலிய கட்டச் சொல்லுங்களேன்"[2]

"அந்த கம்புதான் மனையில் அவளுடன் மாப்பிள்ளையாய் உட்கார்ந்திருந்தது. அவளுக்கு தாலிகட்டிய கணவன் அது"[3] என்ற கூற்றிலிருந்து, புதுமையான திருமணச் சடங்கினை அறியமுடிகின்றது.

**விதவைக்கு மறுமணம்**

இடையர்களின் சமூகத்தில் அண்ணன் இறந்துவிட்டால் அண்ணன் மனைவியை தம்பி திருமணம் செய்வது மரபுவழி வழக்கமாக இருந்தது. அதனை ஏற்க மறுக்கும் இளைஞனுக்கு இடையர்கள் சமூகத்தில் கடும் தண்டனை விதிக்கப்பட்டது.

தன் அண்ணன் இறந்ததால் அவனது மனைவியை திருமணம் செய்து கொள்ளுமாறு அவனது தந்தை கூறுவதை முத்துச்சாமி எனும் இளைஞன் மறுக்கின்றான். அதைக்கேட்டு தலைமை கீதாரி இராமு, இடையர்குலத்திற்குரிய கட்டுப்பாடுகளை எடுத்துக் கூறுகின்றார்.

- தந்தைக்கு சொந்தமான மொத்த ஆடுகளின் எண்ணிக்கையில் எந்த பங்கும் அந்த இளைஞனுக்கு கிடைக்காது,

- இடையர் சாதியில் வேறு எந்த பெண்ணையும் அவன் திருமணம் செய்ய முடியாது.
- மாற்றுத்துணியைக் கூட எடுக்காமல் அந்த இளைஞன் வீட்டைவிட்டு வெளியேற வேண்டும்.
- இடையர்களுள் யாரும் அந்த இளைஞனுக்கு ஆடு மேய்க்கும் வேலைக்கூட தரமாட்டார்கள்.

என்பது போன்ற கட்டுப்பாடுகள் அவர்களின் இனத்தில் கடைபிடிக்கப்பட்டு வந்ததை அறியமுடிகின்றது.

**திருமணச்சீர்வரிசை**

இடையர்குலத்தில் திருமணத்தின் போது, மகன் மகள் இருவருக்குமே சீர்வரிசையாக பெற்றோர் தம்மிடத்தில் உள்ள மொத்த ஆடுகளின் எண்ணிக்கையிலிருந்து பங்கிட்டு 30 அல்லது நாற்பது ஆடுகளைப் பிரித்து தருவது வழக்கம். பாத்திரப்பண்டங்கள் நகை நட்டோடு,இரண்டு மூன்று வருடங்களுக்குத் தேவையான வீட்டு மளிகைச் சாமான்களை சீதனமாய் கொடுப்பது ஆட்டுக்கார இடையர்களின் வழக்கமாயிருந்தது.

**இடையர்களின் குழுவாழ்வும், மண்பற்றும்**

இடையர்கள் ஆட்டுக்கிடைக்கட்டும் தொழிலுக்குச் செல்லும்போது பல குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து குழுவாக பல ஊர்களுக்குப் பயணிக்கின்றனர். ஒற்றுமையுடன், ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளும் சார்பு வாழ்வியலோடு, தொழிலில் கிடைக்கும் வருவாயினைச் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றனர். கிடை அமைப்பது, வட்டம் கட்டி காவல் காப்பது, தங்கும் கூண்டு கட்டுவது போன்ற பணிகளையும் கிடைகட்டுவதற்கு நிலவுடைமையாளர்களிடம் அனுமதி வாங்குவது, பெரிய நிலத்தில் பல இடையர் குடும்பங்கள் ஒன்றாக இணைந்து கிடைக்கட்டுவது, கிடைக்கும் கூலியைப் பகிர்வது என குழுவாக ஒன்றிணைந்து வாழ்கின்றனர்.

இடையர்கள் ஆடுமேய்க்கும் தொழிலுக்காக, சொந்த ஊரினை விட்டு, பல ஊர்களுக்கு சென்றாலும், இறந்து விட்டால், அந்த உடலை சொந்த மண்ணில் புதைப்பதையே விரும்பினர். ஆடுமேய்த்துக் கொண்டிருக்கும் போது எந்த ஊரில் இடையர்கள் இறந்தாலும், உடலை சொந்த ஊருக்குக் கொண்டு வந்து போட்டுத்தான் அடக்கம் செய்து கொண்டிருந்தார்கள். இதனை,

“நாடோடியா அலயிரம் சொந்த மண்ணுல ஒக்காந்து ஒருவேள சோறு திங்கறதில்ல. சாவதற்குள்ளாவது ஒடம்ப ஊருகொண்டு சேத்துடணும்”[4] என்பது ஆட்டுக்காரர்களின் விருப்பமாக இருந்தது என்று புதின ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி சுட்டுவதன் மூலம் அவர்களின் மண் பற்றினை அறியமுடிகின்றது.

**இடையர்களின் ‘வாக்கு’ வன்மை**

இடையர்களின் உழைப்பை மதிக்காமல், கிடைக்கூலி தரமறுக்கும் இரக்கமற்றவர்களுக்கு சரியான பாடம் கற்பிக்க, இடையர்கள் செய்யும் மந்திர தந்திர செயல் மற்றும் சாபமிடும் வழக்கத்தினை இப்புதினம் காட்டுகின்றது.

கிடைக்கூலி மறுப்பவர்களுக்கு பாடம் கற்பிக்கும் விதமாக, ஏமாற்றிய வயல்காரனுக்கு ஏதாவது பதிலுக்குத் தீங்கு செய்தாலன்றி மனம் ஆறாது என்று இடையர்கள் கலந்து பேசி, முடிவெத்தனர். ஆட்டுக்காரர்களில் இரண்டு பேர் குயவன் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து இருட்டோடு இருட்டாக மறைந்துபோய் யாருக்கும் தெரியாமல் குயவன் செய்த சுடாத பச்சை மண் பானையை எடுத்து கொண்டு, அதில் ஆட்டின் பாலைக் கறந்துகொண்டு, ஒரு கட்டிச் சூடமும், ஒரு எலுமிச்சம் பழமும் வாங்கிக்கொண்டு கிடை கட்டிய அந்த ஏமாற்றுக்காரனின் வயலுக்குப் போனார்கள்.

வயலில் சனி மூலையில் ஆழமாய் குழிதோண்டி அதற்குள் சுடாத மண்பானையைப் புதைத்து வைத்தார்கள். சூடத்தைக் கொளுத்திவிட்டு எலுமிச்சம் பழத்தைப் பானைக்குள் போட்டார்கள். பின் ஆட்டுப்பாலைப் பானை நிறையுமளவுக்கு ஊற்றினார்கள். பிறகு மண்ணள்ளிப் போட்டு மூடிவிட்டு “எங்களத் தேடிக் கண்டுபிடிச்சு கெடக்கூலியக் குடுத்து வாக்குத் தீர்த்துக்கிர்ற வரைக்கும் வெள்ளாம, புல்லு பூண்டு எதுவும் மொளக்காம பொட்டலாப் பெயிறணும். இந்தக் கொல்லயில் அருவும் அத்தமிச்சிப் பெயிறணும்”[5] என்று வாக்கு விட்டுவிட்டு திரும்பிப்பாக்காமல் வந்து விடுவர்.

இடையர்களின் வாக்கிற்கு அதிக ஆற்றல் உண்டு. இடையர்களை ஏமாற்றிய நிலவுடைமையாளர்கள், தங்களின் நிலவளத்தை இழப்பர். இடையர்கள் ‘வாக்கு’ கொடுப்பதையும், அதிலிருந்து மீறாமல் அதனைக் காப்பதையும் வாழ்வியல் மதிப்பீடாகக் கொண்டவர்கள்.

**இடையர் குலப்பெண்களின் உழைப்பும், திறமையும்**

இடையர்கள் நாடோடிகளாக, பல ஊர்களுக்குச் சென்று கிடைக்கட்டும் போது,உடன் செல்லும் இடையர்குலப்பெண்களின் உழைப்பு உற்றுநோக்குதற்குரியதாகின்றது. கிடைகட்டுவதும் இரவு காவல்காப்பதும் ஆண்களின் பணியாக இருப்பினும், பகலில் ஆடுகளை மேய்ப்பது, விறகு கொண்டுவருதல், கிடைக்காரர்களுக்கு உணவு சமைப்பது, மற்றும் புதிய ஊர்களில் எதிர்கொள்ளும் சிரமங்களைச் சமாளிக்கும் திறன்களை இடையர்குலப் பெண்கள் பெற்றிருந்ததமையைப்புதினம் நுட்பமாக விவரிக்கின்றது.

ஆட்டுக்காரப் பெண்கள் மிளகாய், கத்திரி விதைகளை நாற்றுவிட்டு வைத்திருந்து, வேறுஊருக்கு போகும் போது நாற்றுகளாக எடுத்துக்கொண்டு போவார்கள். கூண்டு போட்டிருக்கும் இடத்தைச் சுற்றிலும் வெட்டிக் கொத்தி குழிபோட்டு பயிர் வைப்பார்கள். ஆட்டுப் புழுக்கைக்குக் கன்றுகள் நன்கு செழித்து வளரும். மிளகாய் கத்தரிக்குள் ஊடுபயிராக கீரையும் விதைப்பர்.

மேலும் தினச்சமையலுக்குத் தேவைப்படும் மிளகாய் சாந்தினை ஏழு,எட்டு நாட்களுக்குச் சேர்த்து அரைத்து எடுத்துக்கொள்ள ஊருக்குள் சென்று, அங்குள்ள வீடுகளில் அனுமதி கேட்டு, அம்மியில் அரைப்பர். ஒவ்வொருவரும் சிறிய குட்டான் நிறைய கொத்தமல்லி, மிளகாய், பிற சாமான்களை வறுத்து எடுத்துக்கொண்டு வந்து அம்மியில் அரைத்து கெட்டுப்போகாமல் இருக்கவென்று உப்புப்போட்டு நல்லெண்ணெய் ஊற்றி பிசைந்து, மண் சட்டியில் அழுத்தி வைத்துத் துணியால் வேடுகட்டி வைத்துவிடுவர்.

"நாங் கீதாரி மவ. வெள்ளம் தலக்கி மேல போனாலும் கொட நாம் பயப்புடமாட்டன். நாலு கொடிய அறுத்துப் போட்டு அதுமேல படுத்திருப்பன்" என்று கரிச்சா என்ற பெண்ணின் கூற்றிலிருந்து அவர்களின் மன வலிமையையும் தைரியத்தையும் உணரலாம்.

**நம்பிக்கைள்**

ஆடு வளர்க்கும் தொழிலோடு இணைந்த பல நம்பிக்கைள் இடையர்களின்வாழ்வியலோடு பிணைந்தவையாக உள்ளன. ஆடொன்று பொன்னளந்தான் சுழியுள்ள குட்டியை ஈன்றால், கீதாரிக்குக் கெடை பெருகும், வறுமை அற்றுப்போகுமென்பது இடையர்களின் நம்பிக்கையாகும்.

படுசாவு வந்து ஒரே நேரத்தில் பத்து இருபது ஆடுகள் திடீரென்று இறந்துவிடும் போது, இடையர்குல பெண்கள் ஒப்பாரி வைத்து அழுவர். "வித்தாடு அருகும் செத்தாடு பலுக்கும்" என்பது மனதை தேற்றிக்கொள்ளும் பழமொழி கூறுவதிலிருந்து, தீமையில் ஒரு நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை வெளிப்படுகின்றது.

ஆடுகளை மேய்க்கும் இடத்தில், புதரில் மறைந்திருக்கும் முயல்கள் திசைக்கொன்றாக ஓடினால், ஆடுகளுக்கு ஆபத்து வருமென்பது அவர்களது நம்பிக்கை. "மொச செதறி ஓடுது டோய். மொசச் சவுனம் பொல்லாச் சவுனமுடோய். ஆடுவள பத்தரமா பாத்துகிருங்கடோய்"[7] என்று வயதான கீதாரி எச்சரிப்பதன் மூலம் அவர்களின் நம்பிக்கைகளை அறியமுடிகின்றது. சகுனத்தின் வழியே, ஆடுகளைக் காத்துக் கொள்ளுகின்ற கவன உணர்வை நம்பிக்கைள் உண்டாக்குகின்றன.

**பழமொழிகள்**

பழமொழிகள் சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக் கூறுகளையும் விளக்குபவை.இடையர்களின் ஆடுமேய்ச்சல் தொழில் சார்ந்த பல பழமொழி வழக்காறுகளைப்புதினம் வழி அறியமுடிகின்றது.

"ஆட்டுக்கார எடயனுக்கு தூக்கம் வரக்கூடாது".

"ஆட்டுக்கெடயோட அம்மிய தூக்கிக்கிட்டுப் போற எடயன் என்னைக்கும் ஈடேற மாட்டான்ல்லே.

"விடியா மூஞ்சி வேலக்கிப் போனா வேல கெடச்சாலும் கூலி கெடக்காதுல்ல"

"கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்" - இதுப்போன்ற பழமொழிகள்இடையர்களின் மரபார்ந்தப் பண்பாட்டினையும் மனித உணர்வுகளையும் ஒன்றிணைப்பவை.

**முடிவுரை**

நாடோடிகளாகப் பிழைப்பு நடத்தும் ஆட்டுக்கார இடையர்கள் தங்கள் உரிமைகளை இழந்தவர்களாகவே வாழ்கின்றனர். ஆட்டுக்காரர்களுக்கேயுரிய கோழைத்தனத்துடன், நிலவுடைமையாளர்களின் அதிகாரத்திற்கு எதிராக உரிமைக்குரல் எழுப்பாத ஊமைகளாய் இருப்பதை அறிய முடிகின்றது. கல்வி அறிவு பெறமுடியாமல், விளைநிலங்களிலும், காடுமேடுகளிலும் வாழ்ந்து தொலைந்து போய்க்கொண்டிருக்கும் இடையர்களின் தொழில்முறை, வாழ்வியல் விழுமியங்கள், நம்பிக்கைள், பழமொழி, திருமணம் தொடர்பான இனவரைவியல் செய்திகளை 'கீதாரி' புதினம் பதிவு செய்து இருப்பதை ஆய்வுக்கட்டுரையின் வழி அறியமுடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பக்தவச்சலபாரதி | பண்பாட்டுமானுடவியல் | ப.132 |
| 2. | தமிழ்ச்செல்வி. சு | கீதாரி | ப.100 |
| 3. | தமிழ்ச்செல்வி. சு | கீதாரி | ப.101 |
| 4. | தமிழ்ச்செல்வி. சு | கீதாரி | ப.129 |
| 5. | தமிழ்ச்செல்வி. சு | கீதாரி | ப.145 |
| 6. | தமிழ்ச்செல்வி. சு | கீதாரி | ப.153 |
| 7. | தமிழ்ச்செல்வி. சு | கீதாரி | ப.161 |

**பார்வை நூல்கள்**

1. தமிழ்ச்செல்வி, சு., கீதாரி, நியு செஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை.
2. பக்தவச்லபாரதி, பண்பாட்டு மானுடவியல், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம்.
3. சிவசுப்பிரமணியன், ஆ., இனவரைவியலும் தமிழ்நாவலும், நியு செஞ்சுரிபுக் ஹவுஸ்,சென்னை.
4. தனஞ்செயன். ஆ, விளிம்பு நிலைமக்கள் வழக்காறுகள், வல்லினம் பதிப்பு, புதுவை
5. பஞ்சாங்கம், இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், க. அன்னம்பதிப்பரம், தஞ்சை